# இராணிப்பேட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை
## 2023 – 2024

## இராணிப்பேட்டை நகரமன்ற தீர்மானம் எண்.614, நாள்.28.06.2024-ன்

## உண்மை நகல்

இராணிப்பேட்டை நகராட்சி 2023-2024-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1356/2024/சி1)

தீர்மான எண்.614, நாள்.28.06.2024.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஓம்)/- க.சுஜாதா வினோத்
நகரமன்ற தலைவர்,
இராணிப்பேட்டைநகராட்சி.

//உண்மை நகல்//

1/7/24

ஆணையாளர் (கூ.பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.

1/7/2024

Scanned by CamScanner

# இராணிப்பேட்டை நகராட்சி

## 2023—2024ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை
## (01.04.2023 முதல் 31.03.2024 முடிய)
## அமைப்பும் ஆளுமையும்

### 1. (அ)நகரின் வரலாறு

இராணிப்பேட்டை நகரம் நட்பு, கற்பு, வீரத்தின் அடையாளமாக உருவான வரலாறு. நண்பனுக்காக நவாப்பை எதிர்த்து போரிட்டு வீரமரணம் அடைந்த முஸ்லீம் தளபதி நண்பன் போர்க்களத்தில் மாண்டதை கண்டு தற்கொலை செய்து கொண்ட இந்து மன்னன், சாஸ்திரங்களின் கட்டுப்பாட்டால் ஒரு நாள் கூட சேர்ந்து வாழாதிருந்தும் கணவனுக்காக உடன்கட்டை ஏறிய கற்புக்கரசி ஆகியோரின் சரித்திர புகழ்பாடும் நகரமாகும். மராட்டிய மன்னன் வீர சிவாஜியின் மகன் ராஜாராமிடம் இருந்து செஞ்சிக் கோட்டையை கி.பி.1697ம் ஆண்டில் ஔரங்கசீப்பின் தளபதி ஜூல்பிகார்கான் என்பவர் போரிட்டு கைப்பற்றினார். பின்னர் செஞ்சிக் கோட்டையை சொருப்சிங் எனும் ராஜபுத்திர அரசனிடம் ஒப்படைத்தான். அப்போதைய ஆட்சி முறையின்படி, ஆற்காடு நவாப்புக்கு சொருப்சிங் கப்பம் செலுத்த வேண்டும். இந்த கப்பத்தை வசூலித்து டில்லிக்கு அனுப்பி வைக்க வேண்டியது நவாப்பின் பொறுப்பு. சொருப்சிங் ராணி ரமாபாய் தம்பதியரின் மகனாக பிறந்தார். தேஜ்சிங் எனும் தேசிங்கு, இளவரசன் தேசிங்கும் வழுதாவூர் பாளையக்காரர் மகன் மகமத்கானும் நண்பர்கள் இருவரும் இணைந்து டில்லி பாதுஷாவின் விருந்தினர்களாக சென்றனர். அங்கு யாராலும் அடக்க முடியாத பாராசாரி எனும் குதிரையை தேசிங்கு அடக்கினான். இதைக்கண்டு வியந்த பாதுஷா, இளவரசன் தேசிங்கு அடக்கிய குதிரையை அவனுக்கே பரிசாக கொடுத்தார். மேலும், பாதுஷாவின் தலைமை தளபதி பீம்சிங் என்பவர், தன்னுடைய மகள் ராணிபாயை தேசிங்குக்கு திருமணம் செய்து கொடுத்தார். ஆனால், ராணிபாய் குறிப்பிட்ட காலம் வரை தனிமையில் இருக்க வேண்டுமென ஜோதிடர்கள் அறிவுரையின் பேரில் ராணிபாய் செஞ்சிக்கோட்டையின் கன்னிமாடத்தில் குடி வைக்கப்பட்டார்.

இந்நிலையில் தேசிங்கின் தந்தை சொருப்சிங் இறந்துவிட்டதால், தேசிங்கு செஞ்சிக் கோட்டைக்கு ராஜாவாக முடிசூடிக் கொண்டார். மேலும், தனது தளபதியாக நண்பன் மகமத்கானை நியமித்தார். இதையடுத்து, டில்லி பேரரசுக்கு அடிமையாக வாழ பிடிக்காத ராஜாதேசிங்கு, கப்பம் கட்ட மறுத்தார். இதனால் கொதிப்படைந்த டில்லி பேரரசர், ராஜாதேசிங்கை பிடிக்கும்படி ஆற்காடு நவாப்புக்கு உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, ஆற்காடு நவாப்புக்கும், செஞ்சி மன்னனுக்கும் போர் முண்டது. தேசிங்கு ராஜா தன்னுடைய 22வது வயதில் 500 வீரர்கள் மற்றும் 350 குதிரைகள் கொண்ட படையை வழிநடத்தி நவாப்பின் 8 ஆயிரம் குதிரைப்படை மற்றும் 10 ஆயிரம் காலாட்படைகள் கொண்ட பெரும் சேனையை எதிர்த்து வீரமுடன் போரிட்டார். இதற்கிடையே, தேசிங்கின் தளபதி மகமத்கானை தன் பக்கம் இழுத்த நவாப் செய்த முயற்சி பலனளிக்கவில்லை. நண்பனுக்காக மரணமடைவேனே தவிர, உன்னிடம் வரமாட்டேன் என்று மகமத்கான் கூறிவிட்டான். அதேபோல, நவாப் படையை எதிர்த்து ஆக்ரோஷத்துடன் போரிட்டு களத்தில் வீர மரணமடைந்தான். நண்பன் மரணமடைந்ததை பார்த்த தேசிங்கும், துக்கம் தாளாமல் 1714ம் ஆண்டு அக்டோபர் 30ம் தேதி போர்க்களத்தில் தனது உடைவாளை மேல்நோக்கி வீசி, மார்பில் தாங்கி உயிர் துறந்தான்.

பட்டத்து ராணியான ராணிபாய் தனது குல வழக்கப்படி, கணவனின் சிதையுடன் உடன்கட்டை ஏறி அன்றே உயிர் விட்டாள். ராணியின் கற்பு, தேசிங்கின் வீரம், மகமத்கானின் நட்பு ஆகியவற்றை கண்டு வியந்த ஆற்காடு நவாப், ராஜா—ராணியின் அஸ்தியை கொண்டு வந்து ஆற்காடு அருகே பாலாற்றின் வடக்கே நினைவு மண்டபங்கள் கட்டினான். மேலும், ராணியின் நினைவாக ராணிப்பேட்டை எனும் நகரை இங்கு நிர்மாணித்தான். மேலும் மகமத்கானுக்கு செஞ்சி அருகே தேவனூரில் சங்கராபரணி ஆற்றங்கரையில் சமாதி அமைக்கப்பட்டது. ஆனாலும் ஒரு சிலர், தேசிங்கு ராஜாவின் நினைவுச் சின்னத்தின் நேர் எதிரில், பாலாற்றின்

தெற்கு கூரையில் உள்ள சமாதிதான் மகமத்கானின் சமாதி என்றும் கூறுகின்றனர். கற்பு, வீரம், நட்பு ஆகியவற்றின் நினைவாக உருவானதுதான் ராணிப்பேட்டை எனும் சரித்திரப்புகழ் பெற்ற நகரம்.

**(ஆ)நகரின் அமைப்பு**

இராணிப்பேட்டை நகரம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 1.4.1959ம் தேதிய அரசாணை எண்.724ன் படி 1.4.1959ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பின்பு 5.10.1978ம் தேதிய அரசாணை எண் 1546ன் படி 5.10.1978 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறையின் 22.5.98ம் தேதிய அரசு ஆணை(நிலை) எண்.85ல் முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 2.12.2008—ந் தேதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.283—ன்படி இராணிப்பேட்டை நகராட்சி முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. 27.10.1959ம் தேதிய அரசாணை எண் 1366ன் படி இந்நகராட்சி 15 வட்டங்களாகவும் 2.12.67ந் தேதிய அரசு கடித எண்.7236/7—5 பொது தேர்தல் (1)ல் 19 வார்டுகளாகவும் பிரிக்க அனுமதிக்கப்பட்டது. 1969ம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மேற்படி திருத்திய வட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன.

பின்பு அரசு ஆணை எண்.2154, நாள் 10.10.1972ல் 20 வார்டுகளாக நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. 12.9.1973ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கடிதம் எண்.65724—ME—73—3ல்மேற்படி 20 வார்டுகளில் முதல் வார்டு பெண் உறுப்பினருக்கு என நிர்ணயம் செய்ததை இந்நகர்மன்ற தீர்மான எண் 153ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20.9.90ம் தேதிய 872ம் எண்ணிட்ட அரசாணையில் இந்நகர் 28 வார்டுகளாகப் பிரித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11.7.91ந் தேதிய 201ம் எண் அரசாணையின்படி 6,8,9,16,1,719,10,11 ஆகிய எட்டு வார்டுகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 1,10,11,14,15,23,24 மற்றும் 28 ஆகிய எட்டு வார்டுகளைப் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து பிரேரணைகள் அரசுக்கு இவ்வலுவலக 9.1.1991ந் தேதிய ந.க.எண். 6893/90/சி2 எண் கடிதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தனது 29.1.91—ந் தேதிய ந.க.எண்.90443/90 தேர்தல்/2 கடிதத்தில் அரசுக்கு பரிந்துரைசெய்து அனுப்பியதன் பேரில், அரசு தனது 11.7.91ந் தேதிய நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 201ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்ததை அங்கீகரித்துள்ளது. இந்நகரில் 1991ம் ஆண்டின் மக்கள் தொகை 42,583 ஆண்கள், 21,053 பெண்கள், 21530. இதில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் 12,442 தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவர் 56, என இருந்தது அரசு ஆணை எண்.135 மற்றும்136 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை (நகர மன்ற தேர்தல்) நாள் 11.6.1996ல் இந்நகராட்சியை 30 வார்டுகளாக நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. இவற்றில் 9 வார்டுகள் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும், எட்டு வார்டுகள் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 50,764. இதில் ஆண் வாக்காளர்கள் 24,278 பெண் வாக்காளர்கள் 26,486 ஆகும்.

## 2. அ) பரப்பளவு

இந்நகராட்சியின் பரப்பளவு 8.52 சதுரகிலோ மீட்டராகும். அறிக்கை ஆண்டில் நகரின் பரப்பளவின் எல்லையில் எந்த மாறுதலும் இல்லை.

**ஆ). மக்கள் தொகை**

1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்நகர மக்கள் தொகை 35,974 ஆகும். 1991ம் ஆண்டின் மக்கள் தொகை 42,583 ஆகும். 2001ம் ஆண்டின் மக்கள் தொகை 47,236 ஆகும். ஆண்கள் 23,026, பெண்கள் 24,210. மேலும் ஜனவரி 2011ம் ஆண்டின் மக்கள் தொகை 50764 ஆகும். இதில் ஆண்கள் 24278 பெண்கள 26486 ஆகும்.

**இ). நகரமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை**

நகரமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 30.

**ஈ). நகராட்சி நிலை**

22.5.98ல் முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. தற்போது 2.12.2008—ந் தேதி முதல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.283 நாள்:2.12.2008—ன்படி தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**உ. நகரமன்றம்**

19.02.2022 அன்று இந்நகர்மன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றுது. நகரமன்ற தலைவர் பதவிக்கு பொதுப்பிரிவு பெண் உறுப்பினரை நகரமன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் நகரமன்ற உறுப்பினர் பதவிக்கு மொத்தம் 30 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 10 வார்டுகள் பொதுப்பிரிவிற்கும், 5 வார்டுகள் ஆதி திராவிடர் பொது வார்டுகளாகவும், 5 வார்டுகள் ஆதி திராவிடர் பெண்கள் வார்டுகளாகவும், மீதமுள்ள 10 வார்டுகள் பெண்கள் பொது வார்டுகளாகவும் அறிவிக்கப்பட்டது. 02.03.2022 அன்று அனைத்து நகரமன்ற உறுப்பினர்களும் பதவியேற்றுக்கொண்டனர்.

04.03.2022 அன்று காலை 10.30 மணிக்கு நகரமன்ற தலைவர் திருமதி.க. சுஜாதா வினோத் அவர்கள் நகரமன்ற தலைவராக பதவியேற்றுக் கொண்டார். பின்னர் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்ற இந்நகர்மன்ற துணைத்தலைவர் தேர்தலில் திரு.ம.கருணாமூர்த்தி அவர்கள் நகரமன்ற துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**31.03.2022 அன்று கீழ்க்கண்டவாறு நியமனக்குழு உறுப்பினர், ஒப்பந்தக்குழு உறுப்பினர் மற்றும் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

1. திரு.எஸ்.கிருஷ்ணன், நியமனக்குழு உறுப்பினர்
2. திரு.இசட்.அப்துல்லா, ஒப்பந்தக்குழு உறுப்பினர்

1. திரு. என்.எஸ்.எல்லப்பன், வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்
2. திரு. து.குமார், வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்
3. திரு. சு. முத்தழகன், வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்
4. திருமதி.பா.ராஜேஸ்வரி, வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்

<u>நகர்மன்றம்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| **நகரமன்ற தலைவர் : திருமதி.க. சுஜாதா வினோத்** | | | | |
| **நகரமன்ற துணைத் தலைவர் : திரு.ம. கருணாமூர்த்தி** | | | | |
| 1 | திருமதி.நசிமா இப்ராகிம், க/பெ.இப்ராகிம்,<br>**1–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 15 | திருமதி.மாணிக்கம்.ப, த/பெ.பக்தகுமார்,<br>**17–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 2 | திருமதி.ஜெயந்தி, க/பெ. அம்பேத்கார்,<br>**2–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 16 | செல்வி.வனரோஜா.ர, த/பெ.வி.ரவிக்குமார்,<br>**18–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 3 | திரு.பிரபாகரன்.வி, த/பெ. டி. விநாயகம்,<br>**3–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 17 | திரு.முத்தழகன்.சு, த/பெ. சுப்பிரமணியம்,<br>**19–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 4 | திரு.வினோத்.சீ. த/பெ. ல.ப. சீனிவாசன்,<br>**4–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 18 | திரு.சந்தோஷம் கே.பி. , த/பெ.பெருமாள்,<br>**20–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 5 | திரு.எல்லப்பன். என்.எஸ், த/பெ.<br>ந.கோ.சண்முகம்,<br>**5–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 19 | திருமதி.ஜோதி.மு, க/பெ. முருகன்,<br>**21–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 6 | திருமதி.தென்றல்ஜெய்கணேஷ்.ஜெ,<br>க/பெ. சி.ஜெய்கணேஷ்<br>**6–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 20 | திரு.நரேஷ்குமார்.அ, த/பெ. அக்கீம்,<br>**22–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 7 | திருமதி.மஞ்சுளா.என், க/பெ. P.லக்ஷ்மி<br>நாராயணன்,<br>**7–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 21 | திருமதி.ரஹிமாபீ .வே, க/பெ. வேலு,<br>**23–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 8 | திரு.சுரேஷ்.வி, த/பெ. எம்.ஆர். வஜ்ஜிரவேலு,<br>**8–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 22 | திரு.அப்துல்லா .ஜி, த/பெ. ஜியாவுதின்,<br>**24–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 9 | திரு.முருகேசன்.ஜி, த/பெ. கோவிந்தன்,<br>**9–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 23 | திரு.கிருஷ்ணன்.சீ, த/பெ. சீனிவாசன்,<br>**25–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 10 | திருமதி.ஜெயசங்கீதா.வேக/பெ.கா.அசேன்பாஷா<br>**11–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 24 | திருமதி.ஜோதி சேதுராமன்.சே க/பெ.சேதுராமன்<br>**26–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 11 | திரு.ஜீவமணி.ல, த/பெ. பி.லட்சுமணன்,<br>**12–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 25 | திருமதி.திலகவதி.து, க/பெ.துரை,<br>**27–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 12 | திருமதி.அம்பிகா.அ, க/பெ. அர்சுணன்,<br>**13–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 26 | திரு.சங்கர் கணேஷ்.த, த/பெ.தனசேகரன்,<br>**28–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 13 | திருமதி.பவானி.வ, க/பெ.எம்.வரதன்,<br>**14–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 27 | திரு.கோபிகிருஷ்ணன்.ஜெ, த/பெ.<br>ஜெயபிரகாஷ்,<br>**29–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |
| 14 | திருமதி.ராஜேஸ்வரி.பா, க/பெ.எம்.பாண்டுரங்கன்,<br>**16–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** | : | 28 | திரு.குமார்.து, த/பெ. துரை,<br>**30–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்** |

நிர்வாக அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 26.04.2023 வரை திரு.பி.ஏகராஜ் அவர்களும், 27.04.2023 முதல் 04.06.2023 வரை திரு.கே.ருத்திரகோட்டி ஆணையாளர் (பொ) அவர்களும், 05.06.2023 முதல் 29.06.2023 வரை திரு.ந.தட்சிணாமூர்த்தி, ஆணையாளர் (கூ.பொ) அவர்களும், 30.06.2023 முதல் 06.03.2023 வரை, திரு.ஜெ.விநாயகம் ஆணையாளர் அவர்களும் 06.03.2024 முதல் 15.03.2024 வரை திரு.மு.பரமுராசு, ஆணையாளர் (பொ) அவர்களும், 15.03.2024 முதல் 31.03.2024 வரை திருமதி.மு.ரா.வசந்தி அவர்களும் ஆணையாளராக பணிபுரிந்து வந்துள்ளனர்

## 3). குழுக்கள்

அறிக்கையாண்டில் நடைபெற்ற நகராட்சி குழுக்களின் கூட்டங்களிலும் மற்றும் முடிவு செய்யப்பட்ட பொருட்களும் கீழ்வருமாறு.

2023—2024

அ). வரி மேல்முறையீட்டுக்குழு கூட்டங்கள்

| | |
|---|---|
| மேற்படி கூட்டங்களில் வைக்கப்பட்ட பொருட்களின் | –– |
| எண்ணிக்கை முடிவு செய்யப்பட்ட எண்ணிக்கையும் | –– |

ஆ). உள்ளூர் திட்டக் குழுமம் கூட்டங்கள்

| | |
|---|---|
| மேற்படி கூட்டங்களில் வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | –– |

2023—2024

**இ). நியமனக்குழுக் கூட்டங்கள்**

| | |
|---|---|
| வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | – |

**ஈ). ஒப்பந்தக்குழு கூட்டங்கள்**

| | |
|---|---|
| வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | –– |

## 4. மேலாண்மை

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியிடங்கள் இந்நகராட்சியில் செயல்பட்டன.

| | |
|---|---|
| 1.மேலாளர் | 1 |
| 2. கணக்கர் | 1 |
| 3. உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 4.உதவியாளர் | 3 |
| 5. இளநிலை உதவியாளர் | 8 |
| 6. பதிவறை எழுத்தர் | 1 |
| 7. அலுவலக உதவியாளர்கள் | 4 |
| 8. ஓட்டுநர் | 3 |

மேற்கண்ட பணியிடங்களுக்கு நடப்பாண்டில் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ. 31682385/— செலவிடப்பட்டுள்ளது.

**ஆளுமை**

வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வாளர்கள் 2 மற்றும் 8 வருவாய் உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். வரி வசூல் துறை இனத்தில் ஏற்பட்ட செலவு விவரம் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. அறிக்கையாண்டில் மேலும் வருவாய் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.3048550/— செலவிடப்பட்டுள்ளது.

**முறையீடு**

அறிக்கையாண்டில் ஊழியர்கள்மீது முறையீட்டுக்குரிய தண்டனை ஏதும் அளிக்கப்படவில்லை.

**இடவசதி**

பிரதான அலுவலகத்தின் இடவசதி போதுமானது. மேலும் ரூ.300,00 லட்சத்தில் புதிய அலுவலகம் மற்றும் நகரமன்ற கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 08.06.2015 அன்று முதல் உபயோகத்தில் இருந்து வருகிறது.

**வழக்குகளும் அதற்கான கட்டணங்களும்**

வழக்கின்மேல் நிறைவேற்றப்படும் விண்ணப்பங்களை தாக்கல் செய்து அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**தொடர்புகள்**

**5.ஆளுகை**

அறிக்கையாண்டில் திரு.கே.ருத்திரகோட்டி 01.04.2023 முதல் 07.06.2023 வரையிலும் திரு.டி.செல்வம், இளநிலை பொறியாளர் 07.06.2023 முதல் 31.07.2023 வரையிலும், திரு.மு.பரமுராசு 31.07.2023 முதல் 31.03.2024 வரையிலும் நகராட்சி பொறியாளராக பணியாற்றி உள்ளார்.

மேலும் நகராட்சி பொறியாளர், இளநிலைப் பொறியாளர் உட்பட 7 பணியாளர்கள் பொறியியல், தெருவிளக்கு மற்றும் குடிநீர் பிரிவில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு நடப்பாண்டில் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.5189670/— செலவிடப்பட்டுள்ளது.

**6. சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள்**

**அ). சாலைகள்**

கான்கிரீட் சாலை, தார்சாலை, கற்சாலை மற்றும் மண் சாலை போன்ற நான்கு சாலைகள் உள்ளன. நகராட்சியால் கீழக்கண்ட சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கான்கிரீட் சாலை | 54.661 |
| 2. | தார்சாலை | 15.221 |
| 3. | பேவர் பிளாக் சாலை | 0.142 |
| 4. | மண் சாலை | 2.858 |
| | | 72.832 |

நகராட்சி எல்லைக்குள் மாநில நெடுஞ்சாலை துறையினரால் **கீழ்க்கண்டுள்ளவாறு** பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. திருத்தணி சாலை
2. ஆர்.ஆர். சாலை
3. கெல்லீஸ் சாலை

இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து சாலைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 11.394 கி.மீ.

**இ. நகராட்சிக்கட்டிடங்கள்**

**கீழே குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் நகராட்சிக்கு சொந்தமானவை.**

| | | |
|---|---|---|
| நகராட்சி அலுவலகம் | : | இரயில்வே ஸ்டேஷன் ரோடு |
| நகராட்சி ஆயுர்வேத மருந்தகம் | : | இரயில்வே ஸ்டேஷன் ரோடு |
| இராணிப்பேட்டை நகர் நல மையம் | : | பிஞ்சி, துரைசாமி லே அவுட் |
| நகராட்சி மகப்பேறு மருத்துவ மனை | : | வண்டிமேட்டுத் தெரு |
| நகராட்சி நடுநிலைப்பள்ளி | : | பஜனைக் கோயில் தெரு காரை |
| நகராட்சி நடுநிலைப்பள்ளி | : | சீனிவாசன்பேட்டை |
| நகராட்சி முஸ்லீம்பெண்கள் பள்ளி | : | ஆர்.ஆர்.ரோடு |
| நகராட்சி முஸ்லீம்பெண்கள் பள்ளி | : | நவல்பூர் |

**7. நகராட்சி தினசரி கடைகள்**

| | | |
|---|---|---|
| RMS இராஜன் கட்டிடம் | : | 6 கடைகள் |
| அம்பேத்கர் அங்காடி | : | 6 கடைகள் |
| முத்துக்கடை ஸ்டால்கள் | : | 6 கடைகள் |
| ஆடு அறுக்கும் தொட்டி | : | 1 |
| நகராட்சி குடியிருப்பு வீடுகள் | : | 6 (RR ரோடு') |
| துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு | : | 24 குடியிருப்புகள் |
| SM மருத்துவ மனை எதிரில் | : | 5 கடைகள் |
| வாரச்சந்தை அருகில் | : | 5 கடைகள் |
| நகராட்சி பங்குகள் | : | 6 |
| RR ரோடு | : | 11 கடைகள் |
| திருமண மண்டபம் | : | 1 |
| முத்துக்கடை சந்திப்பு திறந்தவெளி கடைகள் | . | 30 |
| உழவர் சந்தை அடுத்த வாரச்சந்தை ஒட்டினார்போல் உள்ள காலிமனை எண் | . | 12 |
| ஆர்.ஆர்.ரோடு வணிக வளாக கடை தரைதளம் மற்றும் முதல் தள கடைகளின் எண்ணிக்கை | : | 14 கடைகள் |

| | | |
|---|---|---|
| மட்டன் மற்றும் சிக்கன் இறைச்சி கடைகள் எண்ணிக்கை | : | 31 கடைகள் |
| வண்டிமேட்டுத்தெரு வணிக வளாகம் தரை தள கடைகளின் எண்ணிக்கை | : | 16 கடைகள் |
| புதிய பஸ் நிலையத்தில் கட்டண கழிப்பிட கட்டிடம் | : | 1 |
| அம்மூர் ரோடு | : | 5 கடைகள் |
| வண்டிமேட்டுத் தெருவில் | : | 12 கடைகள் |
| புதிய பஸ் நிலையம் | : | 19 கடைகள் |
| MBT ரோடு | : | 15 கடைகள் |
| MBT ரோடு | : | 1 குடோன் |
| MBT சாலையில் (ஆடு தொட்டி) | : | 30 கடைகள் |
| அம்மூர் சாலையில் வணிக வளாகம் | : | 18 கடைகள் |
| MBT சாலையில் முதல் தளம் | : | 12 கடைகள் |
| MBT சாலையில் மேல் உள்ள கடை | : | 1 கடை |

## 8. சந்தை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடைகள்

| | | |
|---|---|---|
| 1. வாரசந்தை கடைகள் | : | 15 கடைகள் |
| 2. தினசரி சந்தை கடைகள் | : | 20 கடைகள் |
| 3. பெரியார் மார்க்கெட் கடைகள் | : | 8 கடைகள |

## 9. நகர்ப்புற வளர்ச்சி திட்டம்.

இத்திட்டத்தில் அறிக்கையாண்டில் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை

## 10. தங்குமிடம், சத்திரம் மற்றும் தண்ணீர் பந்தல்

நகராட்சியால் தங்குமிடங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை ஆனால் பொதுப்பணி துறையினரால் பராமரிக்கப்டும் தங்குமிடம் ஒன்று நகராட்சி எல்லைக்குள் உள்ளது.

சத்திரங்கள் நகராட்சியால் ஏதும் பராமரிக்கப்படவில்லை. மேலும் அறிக்கையாண்டில் கோடைகாலத்தில் பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள இடத்தில் நகராட்சியால் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது.

**11. தெருவிளக்குகள்**

அறிக்கை ஆண்டில் 31.03.2023 வரை கீழ்காணும் விவரப்படி இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையில் உள்ள சாலைகளில் உள்ள தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 20 W LED | 1183 |
| 2 | 40 W LED | 138 |
| 3 | 90 W LED | 16 |
| 4 | 120 W LED | 384 |
| 5 | 200 W LED | 64 |
| 6 | 150 W LED | 60 |
| | TOTAL | 1895 |

இத்தலைப்பின் கீழ் அறிக்கை 2023–24 ஆண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் கீழ்க்காணும் விவரப்படி உள்ளது.

1) தெருவிளக்கு பராமரிப்பிற்கென மின்சாதனபொருட்கள் வாங்கியது. = ஏதுமில்லை.
2) அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தனியர் மயம் செலவினம் = 13.50 இலட்சம்

**(கல்வி) ஆரம்பக் கல்வி**

**12. கல்வி வசதிகள்**

நகர எல்லைக்குள் 17 பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 4 நகராட்சியால் 31.3.1990 முடிய பராமரிக்கப்பட்டு வந்தது. பின் 1.4.1990 முதல் இப்பள்ளிக்கூடங்கள் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு, ஊதியங்கள் கல்வித் துறையினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

**13. நகராட்சிப்பள்ளிக்கூடங்கள்**

தற்போது நகராட்சியின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட நான்கு பள்ளிக்கூடங்கள் உள்ளன.

1. சீனிவாசன் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி.
2. காரை நகராட்சி நடுநிலைப்பள்ளி.
3. நகராட்சி முஸ்லீம் பெண்கள் ஆரம்பப்பள்ளி.
4. நகராட்சி முஸ்லீம் ஆண்கள் ஆரம்பப்பள்ளி.

இதில் உள்ள ஆசிரியர்களின் ஊதியங்கள் கல்வித்துறையால் வழங்கப்பட்டுவருகின்றன. கட்டிடங்கள் மட்டும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**14. சிப்பந்திகள்**

31.10.1990 முதல் நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்த சிப்பந்திகள் அனைவரும் அரசினரால் 1.4.1990 முதல் எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

**15. இடவசதியும் தளவாடங்களும்**

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 4 பள்ளிகளும் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. போதுமான விளையாட்டு மைதானங்கள் எந்த பள்ளிக்கும் இல்லை. விளையாட்டு மைதானங்களுக்கு இடங்கள் வாங்க வேண்டி உள்ளது.தற்போது பள்ளிகளில் உள்ள காலி இடங்கள் விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா பள்ளிகளுக்கும் போதுமான வெளிச்சமும் காற்றுவசதியும் உள்ளது.

## இடைநிலைக் கல்வி

**16. இடவசதியும், எண்ணிக்கையும்**

இந்நகரில் இரண்டு மேல்நிலைப்பள்ளிகள் அரசாலும் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் தனியாராலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**17. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்**

இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 4 பள்ளி சத்துணவு மையங்கள் மட்டும் செயல் பட்டு வருகின்றன. இம்மையங்களில் தினமும் 246 மாணவ மாணவிகள் உணவு உட்கொள்கின்றனர். அன்றாட சத்துணவிற்கு வாலாஜா சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென இந்நகராட்சியில் சத்துணவு உதவியாளர் –1 2 அமைப்பாளர்கள், 3 சமையல்காரர் பணியாற்றுகின்றனர் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மதிய உணவிற்கான செலவும் சேர்த்து அறிக்கையாண்டில் ரூ.1569240/– செலவு செய்யப்பட்டுள்ளது. இது அரசு அனுமதிக்கும் மானியத் தொகையிலிருந்து செலவிடப்படுகிறது.இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்ட 15 குழந்தைகள் நலமையங்கள் 15.10.97 முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ICDS) கொண்டு செல்லப்பட்டது.

**18 (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டம்**

**இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட நான்கு நகராட்சி பள்ளிகள் மற்றும் ஒரு ஆதிதிராவிட நலப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 180 மாணவ / மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி பள்ளி வேலை நாட்களில் வழங்கப்பட்டு வருகிறது.**

**19. பொது நூலகங்கள்**

**மேலும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் 05.01.2024 அன்று தொடங்கப்பட்டது இந்நூலகத்தில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2105 புத்தகங்கள் உள்ளன. 05.01.2024 முதல் 2918 நபர்கள் நூலகத்திற்கு வருகை புரிந்து பயன்பெற்றுள்ளனர்.**

## 20. பொது வானொலி

பொது வானொலி எதுவும் பராமரிப்பில் இல்லை

**பொது சுகாதாரம்**

## 21. மருத்துவ மனைகள்

நகரில் SM மருத்துவமனை என்ற பெயரில் தனியார் மருத்துவமனை ஒன்று இயங்கி வருகின்றது.மேற்படி மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளரின் கீழ் தொழுநோய் நிவாரண கழகம் ஒன்று இயங்கி வருகின்றது. இக்கழகம் வாலாஜா தாலுக்காவில் உள்ள தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றது. கிராமத்தில் உள்ள தொழுநோய் கண்டவர்களுக்கு இலவசமாக மாத்திரைகளும் மருத்து உதவியுடன் இளம்பிள்ளைவாத நோய் கண்ட பிள்ளைகள் நலனுக்காக காப்பகம் ஒன்றும் இம்மருத்துவ மனையில் தனியாக இயங்கி வருகின்றது. இது நகராட்சியின் கட்டுப்பாட்டில் இல்லை.

நகராட்சி மூலம் ஆயுர்வேத மருந்தகங்களைப் பராமரித்து வருகிறது. இம்மருந்தகங்களில் மருத்துவ அதிகாரி ஒருவரும் பணிபுரிந்து வருகின்றார். மருந்தகங்களிலும் பெண்களுக்கென்றும் குழந்தைகளுக்கென்றும் தனிப்பட்ட சிறப்பு மருத்துவ வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. இரு மருந்தகங்களிலும் ஏனைய மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மருந்துகள் நகராட்சியால் விலைக்கு வாங்கப்பட்டு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மருந்தக பணியாளர்களுக்கு நடப்பாண்டில் ரூ.1726786/— செலவிடப்பட்டுள்ளது.

## 22. நோயாளிகள்

**இந்நகராட்சி வளாகத்தில் உள்ள** ஆயுர்வேத மருந்தகத்தில் மட்டும் 34,659 நோயாளிகளுக்கு அறிக்கை ஆண்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## 23. நிறுவனமும், சிப்பந்திகளும்

இந்நகராட்சியில் துப்புரவு அலுவலர் பதவி 18.6.90 முதல் தோற்றுவிக்கப்பட்டது. துப்புரவு அலுவலர் பணியிடம், 1 துப்புரவு ஆய்வர் —1 பணிபுரிந்து வருகின்றார். துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 4 நபர்களும், ஓட்டுநர் 1 நபர் மற்றும் 48 துப்புரவு பணியாளர்கள் பணி செய்து வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களின் ஊதியத்திற்காக அறிக்கையாண்டில் ரூ. 3147813/— செலவிடப்பட்டுள்ளது.

## 24. பிறப்பு விகிதமும், தாய்சேய் நல வசதியும்

அறிக்கையாண்டில் 628 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 577 ஆகும். தாய்சேய் நலவிடுதியில் ஒரு பெண் மருத்துவ அதிகாரியும்,1 மகப்பேறு உதவியாளரும், 1 ஆயாவும் பணிபுரிகின்றனர். மகப்பேறு உதவியாளர்களால் அறிக்கையாண்டில் 40 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டது. இதைத்தவிர ஸ்கடர் நினைவு மருத்துவ மனையிலும் டாக்டர் ராஸேஸ்வரி மருத்துவ மனையிலும் மற்றும் அஞ்சுகம் மருத்துவமனையில் பார்க்கப்பட்ட பிரசவங்களின் எண்ணிக்கை 628 ஆகும்.

## 25. இறப்பு விகிதமும், கொள்ளை நோயும்

இவ்வாண்டு 330 மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறப்பு விகிதம் சென்ற ஆண்டு மரணம் 241 இவ்வாண்டில் இந்நகரில் தொற்றுநோய் பாதிப்புக்கானஅறிவிப்பு ஏதும் செய்யப்படவில்லை.

## 26. துப்புரவு

### (அ) சுகாதாரம்

நகரிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலையும், தெருக்களைக் கூட்டும் வேலையும், பொது சுகாதார ஊழியர்களால் மேற் கொள்ளப்பட்டது.

இந்நகராட்சியால் ஒரு டிப்பர் லாரி, ஒரு லாரி, 7 எல்.சி.வீ மூலம் குப்பை அகற்றும் பணியில் உபயோகாப்படுத்தப்பட்டு வருகின்றன. பொது சுகாதார கழிப்பிடங்கள் 19, கட்டண கழிப்பிடம் 3, ஆக மொத்தம் 22 கழிப்பிடங்கள் இந்நகரில் இந்நகராட்சியால் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து வீடுகளிலும் கழிப்பிடங்கள் அமைக்க பொது சுகாதார சட்டப்பரிவு 39ன் படி அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுக்கழிப்பிடங்களில் கட்டணம் பெறாமல் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 27. அபாயகரமானது மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள்

அபாயகரமானது மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் அனைத்தும் உரிமை ஆணை பெற்று நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 249ன் கீழ் இ.ஐ.டி பாரி கம்பெனியும், தோல்பதனிடும் தொழிற்சாலைகளும் பெரிய தொழில் நிறுவனங்களாகும். மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 224ன் கீழ் உரிமம் பெறாத நபர்களுக்கு நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நீதி மன்ற நடவடிக்கை ஏதும் இல்லை அறிக்கையாண்டில் கட்டணமாக ரூ.184035/— வசூல் செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.1875011/— வசூல் செய்யப்பட்டது.

## 28. பொது சுகாதார சட்டம்

பொது சுகாதார சட்டத்தின் செயல்பாட்டின் கீழ் சாக்கடை நீர் தெருவில் ஓடவிடுவது, மல அறைகள் இல்லாதிருத்தல், மல அறைகள் திருத்தி அமைத்தல் மற்றும் அச்சட்டத்தின் கீழ் தொல்லையாக பொது சுகாதாரத்திற்கு குந்தகம் விளைவிப்பதாக இருந்தவற்றைச் சரி செய்து நிவர்த்திக்க அறிவிப்புகள் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வினத்தின் கீழ் உரிமத் தொகை 1978ல் நிர்ணயம் செய்யப்பட்டது. 1996—1997ம் ஆண்டில் (1.4.96 முதல் இவ்வுரிமைத் தொகை திருத்தம் செய்து) உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 29. உரக்கிடங்கு

இந்நகராட்சியில் உரக்கிடங்கு 1.56 ஏக்கர் மற்றும் மருதம்பாக்கம் கிராமம் கூட்டு உரக்கிடங்கு 10.82 ஏக்கர் விஸ்திரணத்தில் நகரின் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. நகரின் அருகாமையில் உரக்கிடங்கு அமைக்க உகந்த காலி இடம் கிடைக்காததால் இந்நகர எல்லைக்குள் 3 எம்.சி.சி. மையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 30. குடிநீர் விநியோகம்

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நகரின் குடிநீர் விநியோகம் நகராட்சியால் பராமரிக்கப் படுகிறது. அறிக்கையாண்டில் 235 ஒற்றைப்பொது குழாய் பராமரிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் மீட்டர் இல்லாத வீட்டு உபயோகத்திற்க்கான குழாய் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை. வீட்டு குழாய் இணைப்புகள் மீட்டர் இன்றி அளவுமாணி மீட்டர் முறையிலும் மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத பிற காரியங்களுக்கும் 8238 இணைப்புகள் உள்ளன. அறிக்கையாண்டில் நாள் ஒன்றுக்கு 48.70 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு நபர் 1க்கு நாள் ஒன்றுக்கு 96.00லிட்டர் வீதம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தண்ணீர் வரியாகவும், கட்டணமாகவும் ரூ.11687000/— வசூல் செய்யப்பட்டது. செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி கட்டண நிதிக் கணக்கு ஏதும் பராமரிக்கவில்லை.

## 31. பாதாளச்சாக்கடை திட்டம்

**இராணிப்பேட்டை நகராட்சி 8.52 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகரம் ஆகும்.2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரரின் மொத்த மக்கள் தொகை 50764 ஆகும். இந்நகராட்சியில் தற்போது திறந்தவெளி கால்வாய் திட்டத்தின் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இராணிப்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 30 வரையிலான அனைத்து வார்டு பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்ககோரி செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Dicision) இராணிப்பேட்டை அவர்களுக்கு இந்நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.1454/2021/இ1 நாள்.10.12.2021 அனுப்பப்பட்டுள்ளதின் பேரில் செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர் அவர்களிடமிருந்து மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ரூ.53.50 இலட்சம் கட்டணம் செலுத்தக் கோரி கடிதம் எண்.F–RPT/UGSS/DO/RWS/RPT நாள்.30.06.2022 வரப்பெற்றமைக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1454/2021/இ1 நாள்.29.07.2022–ல் நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு மேற்படி கட்டண தொகையினை திட்ட நிதியில் சேர்த்துக் கொள்ள கோரி பதில் கடிதம் அனுப்பப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும பணி நடைபெற்று வருகிறது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

## 32. பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பல வகைப்பட்டவைகள்

நாய்க்கடியினால் இவ்வாண்டில் எவரும் இறக்கவில்லை. அறிக்கையாண்டில் 1122 நாய்கள் கணக்கெடுக்கப்பட்டு 798 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது. பன்றிகளால் பரவும் மூளைக்காய்ச்சல் நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் பன்றிகள் ஏதும் சுட்டு அழிக்கப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் பன்றிகள் வளர்ப்பவர்களுக்கு பொது சுகாதாரப்பிரிவின்கீழ் உரிய நோட்டீஸ் வழங்கப்பட்டு பன்றிகள் வளர்க்காத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி அலுவலகத்திலிருந்து அருகாமையில் தீயணைப்பு நிலையம் உள்ளது. இவ்வாண்டில் தீ விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை. மேலும் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் தீயணைப்பு கருவிகள் வைக்கப்பட்டுள்ளது.

## 33. டெங்கு

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் பணி அறிகை ஆண்டில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது, மேலும், அறிக்கையாண்டில் "திறந்த வெளியில் மலஜலம் கழிப்பதை ஒழிக்கும் திட்டத்தின்" கீழ் 371 வீடுகளில் அரசு மான்யத்துடன் கழிவறை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

## பிரதிபலன் தரத்தக்க வரவு இனங்கள்

## 34. பொது

இவ்வினத்தின் கீழ் 2023—2024—ம் ஆண்டு வருமானம் ரூ.233635600/— முந்தைய ஆண்டின் வருமானம் ரூ.212396000/—

## 35.சந்தைகள்,வண்டி நிலையம், பேருந்து நிலையம் மற்றும் ஆடு,மாடு அறுக்குமிடம் மற்றும் வரவுகள்:

| ஆண்டு | கடைகள் உட்பட சந்தைகள் | பேருந்து நிலையம் | ஆடு மாடு அறுக்குமிடம் | கட்டணக் கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 2023—24 | ரூ.13899506/— | 129600 /— (துறை வசூல்) | 915076/— | 68551/— |

### (அ). சந்தைகள்

ஒரு தினசரி சந்தையும் ஒரு வாரச்சந்தையும் மற்றும் கடைகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வாரச் சந்தை கால்நடைகளுக்கு சிறப்பு பெற்றது. இதன் மூலம் நகராட்சிக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது.

### (ஆ). வண்டி நிலையம்

இந்நகரில் வண்டி நிலையம் எதுவும் இல்லை

### (இ). பேருந்து நிலையம்

மத்திய ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் ஒன்று நகரில் கட்டப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வருமானம் ரூ.129600/— ஆகும். சென்ற ஆண்டின் வருமானம் ரூ.129600/—

### (ஈ). ஆடு,மாடு அறுக்கும் தொட்டிகள்

இந்நகரில் தொடர்ந்து ஒரு ஆடு அறுக்கும் தொட்டியும், ஒரு மாடு அறுக்கும் தொட்டியும் பராமரித்து வருகின்றது. ஆடு தொட்டியின் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.915076/— வசூல் ஆகியுள்ளது. சென்ற ஆண்டின் வசூல் ரூ.871500/— ஆகும்.

(உ) இந்நகராட்சியில் இரண்டு நவீன கட்டண கழிப்பிடங்கள் கட்டி குத்தகைக்கு விடப்பட்டது. அறிக்கையாண்டில் வரவு ரூ.68551/—ஆகும். சென்ற ஆண்டில் வருமானம் ரு.179550/—. மேலும் முத்துக்கடை நவீன கட்டண கழிப்பிடம் இடிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டு 01.12.2023 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

### (ஊ) தொழிற்சாலைகள், தொழில்கள்

1400க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு நடத்தப்படும், EID பாரிநிறுவனம் இந்நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தில் கந்தக அமிலம், பீங்கான் துப்புரவுப் பொருட்கள், ஜாடிகள் மற்றும் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்நகரில் சுமார் 80 தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த சிறு தொழில் நிறுவனங்களும் உள்ளன. தோல் ஏற்றுமதியினால் ஏராளமாக அந்நிய செலவாணி கிடைக்கிறது.

**36இராணிப்பேட்டை நகராட்சி**

2023–2024 ஆம் ஆண்டுக்கான திட்ட பணிகள்

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| முலதன மாநிய நிதி 2023–2024 | | |
| 1 | இராணிப்பேட்டை நகராட்சி பாலாற்றில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து இருந்து தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக குடிநீர் பிரதான குழாய் மற்றும் கேபிள் பதிக்கும் பணி | 290.00 |
| நமக்கு நாமே திட்டம் 2023–2024 | | |
| 1 | இராணிப்பேட்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி டிரங்க் ரோடு முதல் எம்.பி.டி ரோடு வரை (இராஜேஸ்வரி தியேட்டர் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையில் ) மின்கம்பங்கள் 150W LED மின் விளக்குகள் அமைத்தல் பணி | 59.00 |
| 2 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண். 22 அம்பேத்கர் தெருவில் புதியதாக கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு | 9.90 |
| 3 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.16 எஸ்.எம்.எச். பின்புறம் புதியதாக கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு | 9.65 |
| 4 | இராணிப்பேட்டை நகராட்சி காரை பகுதியில் உள்ள கால்வாய்க்கு தடுப்பு சுவர் 153 மீட்டர் நீளத்திற்கு அமைத்தல் பணி (வாழைக்கரை அம்மன் கோயில் முதல் காந்தி நகர் 2வது தெரு வரையில்) | 45.00 |
| 5 | வார்டு எண். 13 புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணி செய்தல். | 15.00 |
| 6 | வார்டு எண். 17 புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணி செய்தல். | 15.00 |
| 7 | காந்தி ரோடு மற்றும் ஆர்.ஆர் சாலையின் மத்தியில் 18 மின்கம்பங்கள் அமைத்து 36 எண்ணிக்கைகள் 150W LED மின் விளக்குகள் அமைத்தல். | 15.00 |
| 8 | காரை கிராமம், காரை ஊற்றுக் கால்வாய் (தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு முதல் பாலம் வரையில் ) இருபக்கமும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி. | 25.00 |
| 9 | காரை கிராமம், காரை ஊற்றுக் கால்வாய் (இராணிப்பேட்டை அஞ்சல் நிலையம் முதல் வாழைக் கரையம்மன் கோயில் தெரு வரை) இருபக்கமும் தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி. | 45.00 |
| 10 | காரை கிராமம், காரை ஊற்றுக் கால்வாய் (காந்தி நகர் 2வது தெரு முதல் வக்கீல் தெரு வரை) இருபக்கமும் தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி. | 45.00 |
| 11 | காரை கிராமம், காரை ஊற்றுக் கால்வாய் (வக்கீல் தெரு முதல் தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு வரை) இருபக்கமும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி. | 40.00 |
| தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 | | |
| 1 | வார்டு எண்.10 கே.கே.நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல் பணி | 12.00 |
| 2 | வார்டு எண்.17 பர்மா காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல் பணி | 12.00 |
| 3 | வார்டு எண்.21 ஆர்.எஸ் ரோடு பகுதியில் பொது கழிப்பிடம் அமைத்தல் பணி | 30.00 |
| 4 | வார்டு எண்.28 காந்தி நகர் பகுதியில் பொது கழிப்பிடம் அமைத்தல் பணி | 30.00 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித்திட்டம் 2023–2024 | | |
| 1 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண். 11 ஜெயராம்பேட்டை பகுதியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி | 15.00 |
| 2 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண். 29 பகுதியில் புதியதாக நியாய விலை கடை கட்டுதல் பணி | 18.50 |
| 3 | பழைய பேருந்து நிலையம் (ஆர்.டி.ஓ. அலுவலகம் எதிரில்) பயணியர் நிழற்குடை அமைத்திடும் பணி | 10.00 |
| பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–24 | | |
| 1 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.18 காரை பகுதியில் புதிய அங்கன்வாடி கடடிடம் கட்டுதல் பணி | 15.00 |
| 2 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.21 அங்கன்வாடி மையம் கட்டிடத்திற்கு சுற்றுசுவர் மற்றும் வர்ணம் பூசுதல் பணி | 4.00 |

**37.வறுமை கோட்டிற்கு கீழ் அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகளின் விவரம்**

| வ.எண் | மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின் படி | மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 50764 | 12275 | 3067 | 25% |

**38.வறுமை கோட்டிற்கு கீழ் அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகளின் விவரம்**

இந்நகரில் வறுமைக் கோட்டிற்கு கீழ் மக்கள் அதிகமாக வாழும் குடிசைப்பகுதிகள் உள்ளன. இதில் அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் 11 ஆகும். விவரம் பின்வருமாறு.

1. காரை நேரு நகர்
2. அம்பேத்கர் நகர்
3. ஓட்டேரி காலனி
4. *காரை காலனி*
5. ஏரிக்கரை காலனி
6. பிஞ்சி காலனி
7. அம்மன் கோயில் காலனி
8. லம்பா காலனி
9. *இரயில்வேஸ்டேஷன்காலனி*
10. சீனிவாசன்பேட்டை காலனி
11. ஜெயராம்பேட் காலனி

**39 வறுமை கோட்டிற்கு கீழ் அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகளின் விவரம்**

1) எம்.ஜி.ஆர். நகர்

2) கே.கே.நகர்

3) பாலு தியேட்டர் பின்புறம்

**40. நில அபிவிருத்தி (முழுமைத்திட்டம்)**

இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியினை உள்ளூர் திட்டப்பகுதியாக 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டப்பிரிவு 10(4)ன் கீழ் அறிவிக்கப்பட்டு இப்பகுதிக்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை எண். 180 நாள் 20.2.90ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி முழுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.2000—2001ம் ஆண்டில் மறு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மறு ஆய்வு அறிக்கை உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் பெற்று அரசின் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 28ன்கீழ் இராணிப்பேட்டை உள்ளூர் திட்டக்குழும விதிக்கான மறு ஆய்வு முழுமை திட்டத்திற்கு அரசு ஆணை எண்.26, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:7.2.2005 மூலம் அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. மேலும் மேற்படி அரசாணையினை நகரமன்றம் தனது தீர்மான எண்.84 நாள்:27.7.2005ல் ஒப்புதல் வழங்கி உள்ளது. மேற்படி மறு ஆய்வு முபமைத் திட்டத்திற்காக வரப்பெற்ற அரசாணையினை02.03.2005 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டுள்ள அரசாணையினை விதி 15ன்படி மாவட்ட அரசிதழ் மற்றும் செய்தித்தாளில் விளம்பரப்படுத்தப்பட உள்ளதைத் தொடர்ந்து, தினத்தந்தி (25.8.2005) நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**40 (அ) நில ஆக்கிரமங்களின் விவரம்**

இராணிப்பேட்டை நகரில் தற்காலிக ஆக்கிரமனங்கள் மற்றும் நிரந்திர ஆக்கிரமனஙகள் என இரு வகைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்காலிக ஆக்கிரமனங்களை அவ்வப்போது கண்டறியப்பட்டு அகற்றப்படுவதுடன் மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் அலுவலகத்தில் ஆக்கிரமனங்களை அகற்றுதல் ( Steering Committee) தொடர்பான மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில்

அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. நகரில் உள்ள நிரந்திர ஆக்கிரமனங்களை நகர் சார் அளவரின் உரிய அளவீடுகளுடன் அறிக்கையாக பெறப்பட்ட பின்னரே நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதால் நகர சார் அளவரின் குறிப்புரை பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**41. நகர்ப்புற வீடற்றறோர் தங்கும் விடுதி (URBAN HOMELESS NORMAL SHELTER)**

இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.பி, பிளாக் எண்.23 நகரளவு எண். 2 ( pt) 3( pt) 1600 சதுர மீட்டர் பரப்பளவில் இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை பகுதியில் இராணிப்பேட்டை நகராட்சி, ஆற்காடு நகராட்சி, வாலாஜாபேட்டை நகராட்சி ஆகிய மூன்று நகராட்சிகளுக்கும் ஒருங்கிணைந்து 32 ஆதரவற்ற பயனாளிகள் பயன்பெறும் வகையில் 35.00 இலட்சம் மதிப்பீட்டில் இராணிப்பேட்டை நகராட்சி மூலம் தங்குவதற்காக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண். 4240/2018/ வேமா3 நாள் 22.11.2018/ மேற்படி கட்டட வரைபடத்திற்கு B.P/ R (V.R) எண் .2/ 2018-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி கட்டடம் டிசம்பர் 2019-ல் கட்டி முடிக்கப்பட்டு New Spring Charitable Trust, Kanchipuram. இந்த அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இருந்து வருகிறது. பயனாளிகள் தங்குவதற்காக அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**42. 6–வது சிறுபாசனம் மற்றும் நீர்நிலைகள்**

இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 6–வது சிறுபாசனம் கணக்கெடுப்பு (MIC) மற்றும் நீர்நிலைக் கணக்கெடுப்பு ( CWB) ஆகியவைகளை நகர்ப்புறப் பகுதிகளில் கணக்கெடுப்பு செய்திட மாநில மைய அலுவலர் / இணை ஆணையர் ( C&I) அவர்களின் கடிதம் எண். 20982/RMIS-C/2018– 1 ~ 2 நாள் 24.09.2018 மற்றும் ஆணையர், சிறுபாசனம் கணக்கெடுப்பு மற்றும் கூடுதல் தலைமை செயலர் / நில வகை ஆணையர், அவர்களின் கடிதம் எண். 27886/RMIS-C/2018 நாள் 27.12.2018 மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.கஎண். பி3/16968/2018 நாள் 20.02.2019–ன்படி நகரின் நீர்நிலைப்பகுதிகளை கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டு அதற்கான உரிய படிவத்தில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. அதன் விவரத்தினை வேலூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு அறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண். | நீர் நிலை அமைவிடம் | வகைபாடு | துறையின் விவரம் | சர்வே விவரம் |
|---|---|---|---|---|
| 1 | பஜனை கோயில் தெரு, காரை | குட்டை | வருவாய் துறை | வார்டு எண். எ, பிளாக் எண். 13, நகரளவு எண். 2/9, பரப்பளவு – 0.19 ஏக்கர் |
| 2 | பஜனை கோயில் தெரு, காரை | குளம் | இந்து அறநிலையத் துறை | வார்டு எண். எ, பிளாக் எண். 10, நகரளவு எண். 97, பரப்பளவு – 0.63 ஏக்கர் |
| 3 | ஒட்டேரி தாங்கள் | தாங்கள் ஏரி | வருவாய் துறை | வார்டு எண். எ, பிளாக் எண். 14, நகரளவு எண். 2/1, பரப்பளவு – 0.6 ஏக்கர் |
| 4 | இரயில்வேஸ்டேஷன் ரோடு, காரை | தாங்கள் காலணி ஏரி | வருவாய் துறை | வார்டு எண். எ, பிளாக் எண். 24, நகரளவு எண். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 38, பரப்பளவு – 6.10 ஏக்கர் |
| 5 | கிருஷ்ணகிரி டிரடங்க் ரோடு | ஏரி | பொதுப்பணித்துறை | வார்டு எண். டி, பிளாக் எண். 13, நகரளவு எண். 1 பரப்பளவு – 0.20 ஏக்கர் |
| 6 | பிஞ்சி ரோடு | ஏரி | பொதுப்பணித்துறை | வார்டு எண். டி, பிளாக் எண். 2, நகரளவு எண். 2/2 பரப்பளவு – 28.16 ஏக்கர் |
| 7 | எம்.பி.டி. ரோடு | ஏரி | வருவாய் துறை | வார்டு எண். பி, பிளாக் எண். 17, நகரளவு எண். 29 பரப்பளவு – 7.26 ஏக்கர் |
| 8 | ஜெயராம்பேட்டை ( பிஞ்சி) | குளம் | வருவாய் துறை | வார்டு எண். டி, பிளாக் எண். 18, நகரளவு எண். 6 பரப்பளவு – 1.08 ஏக்கர் |
| 9 | வி.சி. மோட்டூர் (Srinivasan Pettai) | குளம் | வருவாய் துறை | வார்டு எண். சி, பிளாக் எண். 20, நகரளவு எண். 2/4 பரப்பளவு – 2.38 ஏக்கர் |

**43. விரிவான மேம்பாட்டு திட்டங்கள்**

இராணிப்பேட்டை உள்ளூர்திட்ட குழுமத்தின் 18.10.77ந் தேதிய தீர்மானம் எண். 2ல் உள்ளூர் திட்ட பகுதியில் பின்வரும் ஐந்து விரிவு மேம்பாட்டுத் திட்டங்களை விளம்பரம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| | ஏக்கர் |
|---|---|
| 1.விரிவான மேம்பாட்டு திட்டம் எண். 1(அங்கீகரிக்கப்பட்டது) .. | 91.27 |
| 2. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.2.(அங்கீகரிக்கப்பட்டது) .. | 115.50 |
| 3. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.3.(அங்கீகரிக்கப்பட்டது) .. | 110.33 |
| 4. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.4.(அங்கீகரிக்கப்பட்டது) .. | 140.00 |
| 5. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.5.(அங்கீகரிக்கப்பட்டது) .. | 137.92 |

**44. திட்டங்களின் நிலை**

விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1 உள்ளூர் பகுதி அடர்த்தியான குடியிருப்பு கட்டிடங்களை கொண்டுள்ள பகுதிகளாக இருப்பதினாலும், மேம்பாடுகள் அமுல்படுத்த சாத்தியம் இல்லாத பகுதிகளாக இருப்பதாலும் மேற்படி திட்டம் எண். 1ஐக் கைவிட இவ்வுள்ளூர் திட்டகுழுவின் 30.3.88ம் தேதிய தீர்மான எண். 34ல்

தீர்மானிக்கப்பட்டது. வேலூர் நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் 12.7.93ம் தேதிய கடிதத்தில் திட்டம் 1ல் அமுல் செய்யும்படி தெரிவித்துள்ளார். (ந.க.2624/92/வேம3) நில உரிமையாளர்கள் கூட்டம் கூட்டி துணை இயக்குநர், வேலூர் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் நகர் ஊரமைப்புச் சட்டம் 1974 பிரிவு 25ன் கீழ் இணக்கம் அளித்துள்ளார்.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல் முறை உத்திரவு எண். 2760/95/பி3 நாள் 1.12.95ல் மேற்படி விரிவு மேம்பாட்டு திட்ட இணக்கம் அளிக்கப்பட்ட விவரத்தினை படிவம் 9ன்படி தினமலர் தினசரி நாளிதழில் 13.1.96ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டது. அரசு இதழில் பிரசுரம் செய்யப்பட்டது. நகர ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண்.36605/97பி3, நாள் 20.11.97ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

நகர் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1—ஐ நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் மறு ஆய்வு மேற்கொண்டு அரசின் இணக்கத்திற்கு அனுப்பவேண்டி நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.918/02/வேம நாள்:5.5.2003ம் தேதிய கடிதத்துடன் திட்டம் சம்மந்தமான அட்டவணை மற்றும் வரைபடங்களுடன், உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.2, நாள்:25.9.2003ல் தீர்மானத்துடன், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் 1—க்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றத்திற்கான உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் கேட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.918/02 வேம3 நாள்:7.12.09ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலக உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.2 நாள்:26.4.2010ல் தீர்மானத்துடன் இவ்வலுவலக கடித ந.க.எண்.2602/03/எப்1 நாள்:2.5.2010ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 44(அ). <u>விரிவான மேம்பாட்டு திட்டங்கள் 2 மற்றும் 3</u>

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் தன்னுடைய 26.2.92ம் தேதிய ந.க.எண். 43379/91/டிபி2 மற்றும் 43377/91டிபி ஆகிய உத்திரவுகளில் மேற்படி திட்டங்களுக்கு தன் இணக்கத்தினை அளித்துள்ளார்கள். அதன்மீது சட்டவிதி 27(1)ன்படி இந்த திட்டங்களை மாநில அரசிதழிலும், உள்ளூர் தினசரியிலும் விளம்பரம் செய்து ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகள் கோரப்பட்டது.விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ வராமையினால் உள்ளூர் திட்டக்குழுமம் தன் 7.12.93ம் தேதியில் மேற்படி திட்டங்களுக்கு அங்கீகாரத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்கள் மூலமாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டது. வேலூர் துணை நகரமைப்பு இயக்குநர் அவர்கள் தன்னுடைய 5.3.93ந் தேதிய ந.க.எண். 1530/97/வேம3 கடிதத்தில் மேற்படி திட்டங்களைப் பரிந்துரை செய்து சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்துள்ளார். இயக்குநர் அவர்கள் தன்னுடைய ந.க.எண். 43378/91டிபி2 நாள் 22.11.93 மற்றும் ந.க.43379/91/டிபி2, நாள் 22.11.93 தேதிய உத்திரவுகளில் திட்டங்கள் எண்.2 மற்றும் 3க்கு அங்கீகாரம் அளித்துள்ளார்கள். இந்த அங்கீகாரங்களை அரசிதழிலும் மற்ற அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. ஆகவே மேற்படி திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. விரிவான அபிவிருத்தி திட்டம் 3—க்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றத்திற்காக உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண் மூகட்டு, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.1863/01 வே.ம.3 நாள்:9.6.2009ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலக உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.1 நாள்:26.4.2010ல் தீர்மானத்துடன் இவ்வலுவலக கடித ந.க.எண்.1134/2010/எப்1 நாள்:3.5.2010ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### <u>44 (ஆ).விரிவான மேம்பாட்டு திட்டங்கள் 4 மற்றும் 5</u>

நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் தன்னுடைய 23.3.92ம் தேதிய ந.க.எண். 43376/91/டிபி1 மற்றும் 43377/91டிபி ஆகிய உத்திரவுகளில்

மேற்படி இரண்டு திட்டங்களுக்கு தன் இணக்கத்தினை அளித்துள்ளார்கள். அதன்மீது சட்டவிதி 27(1)ன்படி இந்த திட்டங்களை மாநில அரசிதழிலும், உள்ளூர் தினசரியிலும் விளம்பரம் செய்து ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகள் கோரப்பட்டது.விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ வராமையினால் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க தேவையான வரைபடங்கள், ஷெட்யூல்கள் மற்றும் நமுனாக்கள் தயாரித்து இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண். 5653/78எப்2 நாள் 9.12.93 தேதியில் சமர்பிக்கப்பட்டு இயக்குநர் அவர்கள் ந.க.எண். 43377/91/டிபி3 நாள் 19.1.95 மற்றும் ந.க.எண்.30277/92டிபி2, நாள் 21.2.94ல் அங்கிகாரம் அளித்துள்ளார்கள். இந்த அங்கிகாரங்களை அரசிதழிலும் மற்ற அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. ஆகவே மேற்படி திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5க்கு வேலூர் நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.155/02 நாள்:16.3.2005ல் மேற்படி திட்டத்தினை ஒருங்கிணைத்து மறு ஆய்வு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.1 நாள்:6.4.2005ல் ஒப்புதல் பெற்று வேலூர் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர், நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5ஐ நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் இறுதி ஒப்புதல் அளித்து தனது செயல்முறை உத்திரவு ந.க.எண்.5269/02/டிபி1 நாள்:2.4.2007ல் ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி செயல்முறை உத்திரவினை தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**45. பூங்கா/பொது இடங்கள்**

இராணிப்பேட்டை நகராட்சியில் அனுமதி பெற்ற மனைப்பிரிவு மற்றும் அனுமதி பெறாம மனைப்பிரிவில் பூங்கா/பொது இடங்கள்/திறவிடங்கள் என ஒதுக்கப்பட்ட இடங்களில் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டு அவ்விடங்கள் நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாறறம் செய்யப்பட்டு போதிய நிதி வசதி இல்லாத காரணங்களால் பல இடங்கள் சுற்றுவேலி/சுற்றுச்சுவர் அமைக்கப்படாமல் உள்ளதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாத இடங்களை பட்டா உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து வழங்க வட்டாட்சியர், வாலாஜா, வருவாய் கோட்டாட்சியர், இராணிப்பேட்டை ஆகியோர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது

இராணிப்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள **1.**சங்கர் நகர் பூங்கா, **2.**சி.என்.ரங்கநாதன் பூங்கா மற்றும் 3.பி.வி.தியாகராஜன் பூங்கா ஆகிய பூங்காக்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**46 சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட திட்டம்**.

**தமிழ்நாடு அரசாணை எண்.189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.11.015–ன் படி சலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் ஒழுங்குபடுத்தவும், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் திட்ட விதிகள் தமிழ்நாடு அரசிதழ் எண். 230 நாள்.02.11.015–இல் வெளியிடப்பட்டுள்ளதற்கு இணங்கவும் நகராட்சி பகுதியில் சாலையோர வியாபாரிகளில் குறித்து கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டையுடன் (Smart Card) கூடிய விற்பனை செய்வதற்கான சான்றிதழ் , விற்பனை திட்டத்தை தயாரித்தல் சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட அவர்களுக்கு 3.12.2016 அன்று தேர்தல் மூலம் ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு நகர விற்பனை குழு அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.**

**மேலும் கொரோனா காலங்களில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் தமிழக அரசின் மூலம் ஒவ்வொரு சாலையோர வியாபாரிகளுக்கு ரூபாய்.2,000/– வழங்கப்பட்டது மற்றும் சாலையோர வியாபாரிகளுக்கு PMSVANidhi திட்டத்தின் கீழ் ரூ.10,000/–வீதம் வழங்க வழிவகை செய்யப்பட்டு, தற்போது வரை 614 நபர்களுக்கு வங்கிக்கடன் வழங்கப்பட்டும், திரும்ப செலுத்திய நபர்களுக்கு ரூ.20,000/–வீதம் வங்கிக் கடன் விடுவிக்கப்பட்டும் வருகிறது. மேலும் அதனை திரும்பி செலுத்திய நபர்களுக்கு மூன்றாவதாக ரூபாய்.50,000/– வழங்கப்பட்டு வருகிறது**

**47. இதர பயன்தரும் திட்டங்கள்**

அ).கால்நடைப்பட்டி ஏதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை
ஆ)விளக்கெரியும் திட்டங்கள் எதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை
இ).குறைந்த வருவாய் உள்ளோர்களின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை நகராட்சி 7குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு அவைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**பொது வருவாய்கள்**

**48. வருவாய்க்கணக்கு**

கீழக் காணும் விகிதப்படி அரையாண்டு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.
(அரையாண்டு வாடகை மதிப்பின் விகிதம் 14.05%)

1. பொதுக் காரியம் : 6.502%
2. குடிநீர் வழங்கள் மற்றும் சாக்கடைகள் : 4%
3. நூலகம் : 2.50%
4. கல்வி : 1.05%
5. பொதுசுகாதாரம் : ....%

**48 (அ) காலிமனை வரி**

1. பொது காரியங்கள் : 1/2%
2. குடிநீர் வழங்கள் : 1/8%
3. பொதுசுகாதாரம் : 1/16%
4. விளக்கு : 1/16%

3/4%

**50.தொழில் வரி**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11 நாள்:12.1.99ன்படி ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை தொழில்வரி உயர்த்திட வேண்டியதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.38714/2008/ஆர்1 எண்ணிட்ட 13.8.2008ந் தேதிய சுற்றறிக்கையின்படி தற்போது வசூலிக்கப்பட்டு வரும் தொழில்வரியில் 25%க்கு குறையாமலும், 35%க்கு மிகாமலும் உயர்த்திட தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து நகரமன்ற தீர்மானம் எண்.1079 நாள்:27–9–2013ன்படி 1.10.2013 முதல் 25% உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டு 2017–2018 இரண்டாம் அரையாண்டு முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

| எண். | 6 மாத ஊதியம் | 2017–2018 இரண்டாம் அரையாண்டு முதல் |
|---|---|---|
| 1. | ரூ.21000/– வரை | தொழில்வரியில்லை |
| 2. | ரூ.21000/– அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.30000/–க்கு குறைவாக | ரூ. 154.00 |
| 3. | ரூ.30001/– அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.45000/–க்கு குறைவாக | ரூ.388.00 |

| | | |
|---|---|---|
| 4. | ரூ.45001/— அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.60000/—க்கு குறைவாக | ரூ.762.00 |
| 5. | ரூ.60001/— அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.75000/—க்கு குறைவாக | ரூ.1147.00 |
| 6. | ரூ.75001/— அல்லது அதற்கு அதிகமாகவும் | ரூ.1250.00 |

**51, வரி இனம், வரியில்லாத இனங்களின் கேட்பு, வசூல், நிலுவைப் பட்டியல்**

| இனங்கள் | மொத்த கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 939.27 | 635.40 | 303.87 | 67.65% |
| தொழில்வரி | 335.67 | 287.51 | 48.16 | 85.65% |
| குடிநீர் கட்டணம் | 295.49 | 116.87 | 178.63 | 39.55% |
| வரியில்லா இனம் | 709.10 | 240.78 | 468.33 | 33.95% |

**நிதி நிலைமை**

**52. பொதுக் கணக்கு வரவு செலவு விவரங்கள்**

அறிக்கை ஆண்டில் ஒவ்வொரு கணக்குத் தலைப்பின் கீழுள்ள ஆரம்ப நிலுவைகளும் முடிவு நிலுவைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நிதியின் விவரம் | ஆரம்ப இருப்பு | முடிவிருப்பு |
|---|---|---|
| பொதுநிதி | 112061383 | 117664452 |
| கல்விநிதி | 11276100 | 243682.23 |
| குடிநீர் நிதி | 12502514 | 12398527 |

**53. மான்யம்**

சாதாரண கணக்கின் கீழ் சென்ற ஆண்டு மற்றும் நடப்பாண்டு வருமானம் தனியாக வழங்க இயலவில்லை. கீழ் குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்க மானியங்களுடன் உதவித் தொகைகளும் இவ்வாண்டில் பெறப்பட்டது.

1. அம்ரூத் : 150500000
2. தூய்மை இந்தியா திட்டம் : 12500000
3. 15 வது நிதி குழு மானியம் : 5600000
4. SUID : 10396250

**54. மூலதன செலவினம்**

இவ்வறிக்கை ஆண்டில் பொதுக் கணக்கில் மூலதன செலவினம் ரூ.222630890/— செலவிடப்பட்டது.கடந்த ஆண்டில் ரூ.163209094/— ஆகும்.

**55. கடன்கள்**

அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் ரூ.296100000/— கடன் தொகை நிலுவையாக இருந்தது. நடப்பு ஆண்டில் கீழ்கண்டுள்ளவாறு கடன் தொகை பெறப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் கடன்கள் அசல் (ம) வட்டி ரூ.333553105/—

**56 கொடிநாள்**

அறிக்கை ஆண்டில் கொடிநாள் இலக்காக ரூ.2,00,000/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

57. தணிக்கை

அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த தணிக்கைத் தடை எண்ணிக்கை 335 ஆகும். அறிக்கையாண்டில் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வில் 68 தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டன. இறுதியாக 267 தணிக்கைத் தடை உள்ளன.

58. இருப்பும் பொறுப்பும்

இந்நகராட்சிக்கு 31.3.2024–ம் தேதியில் இருந்த இருப்பும் பொறுப்பும் குறித்த தகவல் பட்டியல் வருடாந்திர கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் வரி மற்றும் வரியில்லாத இனங்களில் மொத்த வசூல் 50.72% இதில் சொத்துவரி 67.65% வரியில்லா இனங்கள் 33.95% ஆகும்.

59.மக்களுடன் முதல்வர் முகாம்

மக்ளுடன் முதல்வர் திட்டம் இந்நகராட்சியின் மூலம் அனைத்து வார்டுகளிலும் நடத்தப்பட்டு அனைத்து துறைகளின் மூலம் பொதுமக்களிட்மிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இதில் இராணிப்பேட்டை நகராட்சியில் மட்டும் 422 மனுக்கள் பெறப்பட்டு, 255 மனுக்களின் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு மக்களுக்கு நகரமன்ற தலைவர் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டது

பொது குறிப்பு

இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சாலைவசதி, தெருவிளக்கு பராமரிப்பு நகரமைப்பு திட்ட பணிகள் வருவாய் பிரிவில் நடைபெறும் பணிகள் மற்றும் பொது சுகாதார பணிகள் சீரான முறையில் செய்ய முழு ஒத்துழைப்பு நல்கியதற்கு இந்நகராட்சி நிர்வாகத்திற்கு ஆணையாளருடன் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் மேலாளர், கணக்கர், நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர், நகரமைப்பு ஆய்வர், உதவி திட்ட அமைப்பாளர் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியினை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர் (கூ.பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.

21/06/2024

நகராட்சி அலுவலகம்,
இராணிப்பேட்டை.



Scanned by CamScanner